# Indian Economy Model Test Questions 13 in Tamil With Answer

1. இயற்கைவாதம் என்பது

   **அ. இயற்கையின் விதி** ஆ. செயற்கை விதி

   இ. சட்டத்தின் விதி ஈ. உற்பத்தி விதி

2. பதினோராவது ஐந்தாண்டு திட்டத்தின் பல்வேறு நோக்கங்களுள் ஒன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது. சரியாக அதனைத் தேர்ந்தெடுக்கவும்

   அ. உயர் கல்வியில் இடைநிற்றலை குறைத்தல்

   **ஆ. தொடக்கக் கல்வியில் இடைநிற்றலை குறைத்தல்**

   இ. ஆசிரியர் கல்வியில் இடைநிற்றலைக் குறைத்தல்

   ஈ. இடைநிலைக் கல்வியில் இடைநிற்றலைக் குறைத்தல்

3. தொழில்சார் வகை பிரிவை சாராத துறை எது?

   அ. முதன்மைத் துறை **ஆ. தனியார் துறை**

   இ. இரண்டாம் துறை இ. சார்புத் துறை

4. சர்வ சிக்ஷ அபியனின் (SSA) முக்கிய கொள்கை என்ன?

   **அ. எல்லோருக்கும் அடிப்படைக் கல்வி**

   ஆ. ஆசிரியர் – மாணவர் விகிதம் அதிகரிப்பது

   இ. பள்ளிக்கூடங்கள் அதிகரிப்பது

   ஈ. மானவர்களுக்கு சத்தான உணவு வழங்குவது

5. இந்தியாவில், தேசிய வருவாயைக் கணக்கிட ‘மின்சாரம், எரிவாயு மற்றும் குழிநீர் வழங்கல்’ எத்துறையின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது?

   அ. வேளாண்துறை **ஆ. தொழில்துறை**

   இ. சேவைத்துறை ஈ. இவை ஏதுவுமில்லை

6. இந்தியாவில் ஆண்-பெண் படிப்பறிவு வேற்றுமை விகிதம் எந்த மாநிலத்தில் குறைவாக உள்ளது(Census 2011)?

   அ. தமிழ்நாடு **ஆ. கேரளா**

   இ. உத்தரக்காண்ட் ஈ. பீஹார்

7. நிலம் துண்டாக்கப்படுதல் என்பது

   அ. நிலம் பரவலாக்கப்படுவது **ஆ. நிலம் மேலும் சிறு பகுதிகளாக பிரிப்பது**

   இ. விளைச்சலுக்கு பயன்படாத நிலம் ஈ. விளைச்சலுக்கு பயன்படும் நிலம்

8. பருவகால வேலையின்மை எத்துறையின் இயல்பு?

அ. தொழில் **ஆ. வேளாண்மை**

இ. பணிகள் ஈ. போக்குவரத்து

9. எந்த ஐந்தாண்டுத் திட்டத்தில், பி.சி.மஹலநோபிஸ் அளித்த வளர்ச்சிக் கோட்பாடு பயன்படுத்தப்பட்டது?

அ. 5-வது ஐந்தாண்டு திட்டம் ஆ. 4-வது ஐந்தாண்டு திட்டம்

இ. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் **ஈ. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்**

10. 13-வது நிதிக்குழுவின் தலைவர் யார்?

**அ. டாக்டர் விஜய் கேல்கர்** ஆ. கே.சி. நியோகி

இ. கே. சந்தானம் ஈ. ஜெ.எம். ஷெலட்

11. கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு வாக்கியங்களில் (A) கூற்றையும் மற்றும் (R) காரணத்தையும் குறிக்கிறது.

கூற்று(A): இந்தியாவில் தொழில் முன்னேற்றத்திற்கான செயல் திட்டம் 1991-ல் பெரும் மாற்றத்தைக் கண்டது.

காரணம்(R): 1991 வரை, புதிய கண்டுபிடிப்பு மற்றும் போட்டிற்கன வாய்ப்பு உற்பத்தியாளர்களுக்கு குறைந்தே காணப்பட்டது.

அ. (A) சரி ஆனால் (R) தவறு

**ஆ. (A) மற்றும் (R) இரண்டும் சரியானதே மற்றும் ®, (A) வை விளக்குகிறது**

இ. (A) மற்றும் (R) இரண்டும் சரியானதே மற்றும் ®, (A) வை விளக்கவில்லை

ஈ. (A) மற்றும் ® இரண்டும் தவறு

12. எந்த தொழிற்கொள்கையின் கீழ், இந்திய தொழிற்சாலைகள் மூன்று அட்டவணைகளின் கீழ் பிரிக்கப்பட்டன?

அ. தொழிற் கொள்கை தீர்மானம், 1948 **ஆ. தொழிற் கொள்கை தீர்மானம், 1956**

இ. தொழிற் கொள்கை அறிக்கை 1977 ஈ. தொழிற் கொள்கை, 1980

13. வேளாண் துறையில் முதலீட்டை அதிகரிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட ராஷ்டிரிய க்ரிஷி விகா யோஜனா எந்த ஐந்தாண்டு திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது?

அ. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆ. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம்

**இ. பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்** ஈ. பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

14. இந்தியாவில் புதிய பொருளாதாரக் கொள்கை தொடங்கப்பட்ட ஆண்டு

அ. 1990 **ஆ. 1991** இ. 1992 ஈ. 1993

15. 10வது திட்டகாலத்தில் தேசிய வருவாயின் உண்மையான வளர்ச்சி விகிதம்

**அ. 7.6 சதவீதம்** ஆ. 7.1 சதவீதம்

இ. 7.3 சதவீதம் ஈ. 7.5 சதவீதம்

16. 50,000 க்குக் கீழ் மக்கள் தொகை கொண்ட பட்டணம் எதை சார்ந்தது?

அ. தேசிய நகராட்சி சுகாதாரச் சேவை (NUHM)

**ஆ. தேசிய நாட்டுப்புறச் சுகாதாரச் சேவை(NRHM)**

இ. தேசிய சுகாதாரச் சேவை (NHM)

ஈ. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும்

17. 2000 ஆம் ஆண்டின் தேசிய மக்கள் தொகை கொள்கையின் முக்கிய குறிக்கோள்

**அ. 2046 ஆம் ஆண்டிற்குள் நிலையான மக்கள் தொகையை அடைவது**

ஆ. பிறப்பு வீதத்தை குறைப்பது

இ. மக்கள் தொகையின் தரத்தை உயர்த்துவது

ஈ. இறப்பு வீதத்தை குறைப்பது

18. கீழ்க்கண்ட திட்டங்களில் எந்த திட்டம் நகர்ப்புற குடிசை வாழ் மக்கள் பயன்பெறும் பொருட்டு இந்திய அரசால் ஆரம்பிக்கப்பட்டது?

**அ. ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசை வளர்ச்சித் திட்டம்**

ஆ. இந்திரா அவாஸ் யோஜனா

இ. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்

ஈ. ஸ்வர்ணஜெயந்தி ரோஜ்கர் யோஜனா

19. பொதுத்துறை- தனியார் துறையின் கூட்டுப் பங்கு இது வளர்ச்சி அடைய விரும்பப்படுகின்றது

**அ. கட்டமைப்பு** ஆ. வேளாண்மை

இ. தொழில்கள் ஈ. வர்த்தகம்

20. வேலை வாய்ப்பு நிலையை அறிந்து கொள்ள எந்த கீழ்க்கண்ட முறை பெரிதும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது?

அ. **வழக்கமான தரம்** ஆ. நிகழ்கால் அன்றாட தரம்

இ. நிகழ்கால வார தரம் ஈ. நிகழ்கால மாத தரம்

21. பின்வருவனவற்றுள் எது இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளுள் ஒன்றாகும்?

**அ. ஜமீன்தாரி முறை ஒழிப்பு** ஆ. மஹல்வாரி முறை ஒழிப்பு

இ. இரயத்வாரி முறை ஒழிப்பு ஈ. நில ஆவணங்கள் ஒழிப்பு

22. இந்தியத் திட்டக்குழுவின் தலைவர் யார்?

அ. குடியரசுத் தலைவர் **ஆ. பிரதம மந்திரி**

இ. நிதித்துறை மந்திரி ஈ. பாதுகாப்புத்துறை மாதிரி

23. கீழ்க்கண்டவற்றுள் எது குத்தகைதாரர் சீர்திருத்தத்தில் ஒன்றாக இல்லை?

அ. வாடகையை சீர் செய்தல் ஆ. குத்தகை பாதுகாப்பு

**இ. இடையீட்டாளர்களை ஒழித்தல்** ஈ. குத்தகைதாரருக்கு நில உரிமை வழங்கல்

24. பின்வரும் கூற்றினை கருத்தில் கொள்க.

கூற்று 1: ஒரு நிறுவனத்திற்கும் இன்னொரு நிறுவனத்திற்கும் இடையில் நடைபெறும் வாங்குதல் அல்லது விற்றல் போன்ற மின் வணிகத்தை பிசினஸ்-டு-பிசினஸ் என வகைப்படுத்தலாம்.

கூற்று 2: பிசினஸ்-டு-கஸ்டமர் வகையிலான மின்வணிகம் செய்வதற்கு இணையத்தில் ஒரு வலைத்தளம் உருவாக்கப்பட வேண்டும்

அ. கூற்று 1 சரி மற்றும் கூற்று 2 தவறு **ஆ. கூற்று 1 மற்றும் கூற்று 2 ஆகிய இரண்டுமே சரி**

இ. கூற்று 1 தவறு மற்றும் கூற்று 2 சரி ஈ. கூற்று 1 மற்றும் கூற்று 2 ஆகிய இரண்டுமே தவறு

25. உலக வர்த்தக அமைப்பானது கீழ்க்கண்ட எந்த நிறுவனத்தின் வாரிசாக கருதப்படுகிறது?

அ. உலக வர்த்தக சமுதாயம் ஆ. பன்னாட்டு வர்த்தக மற்றும் வளர்ச்சி சங்கம்

**இ. காட் ஒப்பந்தம்** ஈ. பொருளாதார மற்றும் சமூக மறுசீரமைப்புச் சங்கம்

26. தமிழ்நாட்டில் யாருடைய கூட்டு நடவடிக்கையின் மூலம் வேலைவாய்ப்பிற்கான தொழில் திறன் பயிற்சி திட்டம், 2000 ஆம் ஆண்டு துவங்கப்படடது

அ. பன்னாட்டு நிதி நிறுவனம் ஆ. உலக வங்கி

**இ. ஒருங்கிணைந்த தேசிய அபிவிருத்தி திட்டம்** ஈ. பன்னாட்டு வளர்ச்சிக் குழு

27. சமுதாய சொத்துகளை உருவாக்கி, கிராமப்புற உள்கட்டமைப்பு வசதிகளை பலப்படுத்த கீழ்க்கண்டவற்றில் எத்திட்டம் குறிக்கோளாக கொண்டுள்ளது

அ. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

**ஆ. நிலமற்ற கிராம மக்களின் வேலைவாய்ப்பு உறுதி திட்டம்**

இ. தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம்

ஈ. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

28. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியாக பொருந்துவதை கண்டுபிடிக்கவும்

**அ. ஆர்.கே. பூரி - 1975ல் தமிழ்நாட்டின் ஆளுநர்**

ஆ. பிமால் ஜலான் - 1997ல் ரிசர்வ் வங்கியின் ஆளுநர்

இ. டாக்டர் விஜய் கெல்கர் – 12 வது நிதிக்குழுவின் தலைவர்

ஈ. லால் பகதூர் சாஸ்திரி - இந்தியத் திட்டக்குழுவின் முதல் தலைவர்

29. இந்தியாவில், எந்த ஐந்தாண்டுத் திட்டம் 'கல்வியில் விரிவு, தரம், சமநிலை' ஆகியவற்றை வலியுறுத்துகின்றது?

**அ. 12ம் திட்டம்** ஆ. 11ம் திட்டம்

இ. 10ம் திட்டம் ஈ. 9ம் திட்டம்

30. தொழில் மீட்சிக் காலம் என்று அழைக்கப்படும் தொழில் நிலை யாது?

அ. நிலை I 1951-56 ஆ. நிலை II 1965-80

**இ. நிலை III 1981-91** ஈ. நிலை IV 1991-92 லிருந்து

31. இந்தியாவில் எந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் தேசிய வளர்ச்சிக்குழு , வேளாண்மை துறையில் நான்கு சதவீத வளர்ச்சி அடைய, 14 அம்சம் நடவடிக்கையை உருவாக்கியது

**அ. 11ம் திட்டம்** ஆ. 12ம் திட்டம்

இ. 10ம் திட்டம் ஈ. 9ம் திட்டம்

32. இந்திய ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட 12வது நிதிக்குழுவின் தலைவர் யார்?

அ. ராஜா செல்லையா **ஆ. சி. ரங்கராஜன்**

இ. கே.சி. பந்த் ஈ. ஜெ.பி. நியோகி

33. இந்தியப் பொருளாதாரம் ஒரு

அ. வளர்ந்த பொருளாதாரமாகும் ஆ. வளராத பொருளாதாரமாகும்

இ. தொழில் பொருளாதாரமாகும் **ஈ. கலப்புப் பொருளாதாரமாகும்**

34. இந்தியாவின் பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் காலத்தைக் கண்டுபிடிக்க,

அ. 2007-2012 ஆ. 2008-2011 இ. 2011-2016 **ஈ. 2012-2017**

35. பின்வருவனவற்றில் எது இந்தியாவில் பொருளாதார திட்டமிடுதலில் நோக்கம் அல்ல?

**அ. மக்கள்தொகை வளர்ச்சி** ஆ. தொழில் வளர்ச்சி

இ. தன்நிறைவு ஈ. வேலைவாய்ப்பை ஏற்படுத்துதல்

36. இந்திரா காந்தி மாத்ரிவ சஹ்யோக் திட்டம் இவர்களுக்காக

**அ. கருவுற்ற பெண்களுக்கு** ஆ. பெண் தொழில்முனைவோருக்கு

இ. பெண்கள் கல்விக்கு ஈ. பெண்கள் வேலைவாய்ப்புக்கு

37. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்தியாவின் சராசரி ஆயுட்கால மதிப்பு ஆனது

**அ. 69.89 ஆண்டுகள்** ஆ. 67.50 ஆண்டுகள்

இ. 66.45 ஆண்டுகள் ஈ. 65.60 ஆண்டுகள்

38. ஈ-நாம் e-NAM என்ற ஈ-வாணிபம் (e-trading) உழவர்களுக்கான ஒரு பிரசங்கம், எத்தனை மாநிலங்களோடு இணைந்துள்ளது?

**அ. 8** ஆ. 2 இ. 10 ஈ. 5

39. "ஜன் அவுஷாதி" திட்டத்தின் நோக்கம் என்ன?

அ. ஆறுகள் மற்றும் உபநதிகளை

ஆ. நகர பகுதிகளைச் சுத்தப்படுத்துதல்

இ. ஒவ்வொரு பயிர் வளர்க்கும் நிலத்திற்கும் தண்ணீர்

**ஈ. தரமுள்ள மருந்துகளை பெறக்கூடிய விலையில் தருவது**

40. பத்தாம் நிதிக்குழுவின் தலைவர் யார்?

**அ. கே.சி. பந்த்** ஆ. ஒய்.பி.சவான்

இ. ஸ்ரீ மகாவீர் தியாகி ஈ. கே. சந்தானம்

41. ஜமீந்தாரி முறை ஒழிப்பு மற்றும் நிலச்சீர்திருத்த சட்டத்தை அனைத்து இந்திய மாநிலங்களும் அமல்படுத்திய ஆண்டு எது?

அ. 1950 ஆ. 1951 **இ. 1952** ஈ. 1953

42. 1950 ஆண்டில் திட்டக்குழு இவரால் அமைக்கப்பட்டது?

அ. பி.எஸ். மின்காஸ் **ஆ. ஜவஹர்லால் நேரு**

இ. எம்.என். இராய் ஈ. எஸ்.டி. டெண்டுல்கர்

43. பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம்

அ. 1997-2002 ஆ. 1998-2003 இ. 2010-2015 **ஈ. 2012- 2017**

44. கீழ்க்கண்டவற்றுள் எது சரியான இணை?

**அ. துவார்கநாத் தாகூர் - நில உடமையாளர்கள் சொசைட்டி**

ஆ. வில்லியம் ஆடம்ஸ் - இந்தியா லீக்

இ. ஏ.எம். போஸ் - பிரிட்டிஷ் இந்தியா சொசைட்டி

ஈ. சிசிர்குமார் கோஷ் - இந்தியன் சொசைட்டி

45. 13வது நிதிக்குழுவின் கீழ், அதிகபட்ச நிதி ஒதுக்கீடு எந்த மாநிலத்திற்கு தரப்பட்டது?

அ. ஆந்திரப்பிரதேசம் ஆ. பீகார்

**இ. உத்தரப்பிரதேசம்** ஈ. தமிழ்நாடு

46. மாசாணிக் குழு எந்தத் துறையில் அமர்த்தப்பட்டது?

அ. இரயில்வே ஆ. கடல் போக்குவரத்து

இ. வான் போக்குவரத்து **ஈ. சாலை போக்குவரத்து**

47. எந்தத் திட்டம், நிலையான கட்டுமானப் பணிகளை உருவாக்குவதன் மூலம் கிராமப் புறங்களில் பற்றாக்குறையை குறைக்கும் நோக்கில் துவங்கப்பட்டது?

அ. சிறு விவசாயிகள் முன்னேற்ற முகமை

**ஆ. கிராமப்புற பணி திட்டம்**

இ. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

ஈ. மகாத்மா காந்தி கிராமப்புற வேலை காப்புறுதி திட்டம்

48. செலவு வரியை அறிமுகப்படுத்தியவர் யார்?

அ. பிமால்ஜலான் **ஆ. என். கால்டா**

இ. கென்னத் ஆரோ ஈ. பால் சாமுவேல்சன்

49. உற்பத்தி நடவடிக்கைகளில் அரசு பங்கு கொள்ளாமல் இருக்கும் கொள்கை

**அ. தலையிடாக்கொள்கை** ஆ. பேரியல் பொருளாதார கொள்கை

இ. பணவியல் கொள்கை ஈ. அரசின் கொள்கை

50. 12வது ஐந்தாண்டுத் திட்டத்தில் எந்தத் துறைக்கு அதிக தொகை ஒதுக்கப்பட்டது?

அ. எரிசக்தி துறை **ஆ. சமூகத் துறை**

இ. போக்குவரத்துத் துறை ஈ. தொலைதொடர்புத் துறை

51. கீழ்க்கண்ட கூற்றை கவனித்து சரியான இடையை தேர்ந்தெடு:

1. சர்தார் சரோவர் நர்மதா நிகாம் திட்டம் நர்மதா ஆற்றின் கால்வாயின் மேற்பரப்பில் சூரிய பலகையை அமைத்து மின்சாரம் தயாரிக்கும் திட்டமாகும்.

2. தீனதயாள் உபதாயா கிராம ஜோதி யோஜனா நாட்டிலுள்ள எல்லா ஊரக வீடுகளில் மின்சாரம் வழங்குவதற்காகும்.

அ. 1 மட்டும் ஆ. 2 மட்டும்

**இ. இரண்டுமே சரி** ஈ. இரண்டுமே தவறு

52. கீழ்க்காணும் மாநிலங்களை அவற்றின் குழந்தை பாலின விகிதத்துடன் (2011 மக்கள் தொகைப்படி) பொருத்துக.

| மாநிலம் | குழந்தை பாலின விகிதம் |
|---|---|
| அ. கேரளா | 1. 946 |
| ஆ. ஹரியானா | 2. 899 |
| இ. தமிழ்நாடு | 3. 969 |
| ஈ. உத்திரப்பிரதேசம் | 4. 830 |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 3 | 4 | 2 |
| ஆ. | 1 | 2 | 3 | 4 |
| இ. | 3 | 2 | 1 | 4 |
| **ஈ.** | **3** | **4** | **1** | **2** |

53. பண நோட்டுகள் வழங்குதலில், இந்தியாவில் எந்த முறை பின்பற்றப்படுகிறது?

அ. விகிதாச்சார காப்பு முறை **ஆ. குறைந்தபட்ச காப்பு முறை**

இ. அதிகபட்ச காப்பு முறை ஈ. நிலையான காப்பு முறை

54. பொருளாதாரத்தில் எந்த சந்தை எளிதான நீர்மையை ஊக்குவித்து பொதுமக்களை முதலீடு செய்ய தூண்டி மறைந்துள்ள உபரியை வெளிகொணர்கின்ற அமைப்பு?

அ. பொருள் சந்தை ஆ. பணச்சந்தை

**இ. பங்கு சந்தை** ஈ. செலாவணி மாற்று சந்தை

55. முதலாவது நிதி ஆணையத்தின் தலைவர் யார்?

அ. வி. கர்னல் ஆ. எஸ். பென்ஜமின்

**இ. கே.சி. நியோகி** ஈ. ஹெச்.டி. ரியோக்

56. "PMAY" என்ற சொல் எதைக் குறிக்கிறது?

அ. மீன் சம்பந்தப்பட்ட தொழில் **ஆ. வீடு உருவாக்குதல்**

இ. பங்கு வர்த்தகம் ஈ. வைர வர்த்தகம்

57. பின்வரும் இந்திய பாராளுமன்ற குழுக்களில் எந்த ஒன்று நிதி விவகாரங்களுடன் தொடர்புடையது அன்று?

அ. பொது கணக்கு குழு ஆ. மதிப்பீட்டுக் குழு

இ. பொதுத்துறை நிறுவனங்களுக்கான குழு **ஈ. அரசு உத்தரவாதங்களுக்கான குழு**

58. சரியான விடையை தேர்ந்தெடுத்து பொருத்துக.

| பட்டியல் 1 (மொழி) | பட்டியல் 2 (குடும்பம்) |
|---|---|
| அ. பெங்காலி | 1. சீனா-திபெத்தியன் |
| ஆ. கோண்டி | 2. ஆஸ்டிரிக் |
| இ. கச்சின் | 3. இந்தோ-ஐரோப்பியன் |
| ஈ. கோர்கு | 4. திராவிடன் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ, | 4 | 2 | 3 | 1 |
| **ஆ.** | **3** | **4** | **1** | **2** |
| இ. | 2 | 3 | 1 | 4 |
| ஈ. | 3 | 1 | 4 | 2 |

59. இவற்றில் ஒரு திட்ட மாதிரி புதிய காந்திய முன்னேற்ற அணுகுமுறையைக் கொண்டது?

அ. எல்.பி.ஜி. மாதிரி ஆ. பேரியல் தொழில் அபிவிருத்தி மாதிரி

**இ. புரா (PURA) மாதிரி** ஈ. சமதர்ம சமுதாய முறை மாதிரி

60. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை வடிவமைத்தவர் யார்?

அ. ஹராட்-டோமர் ஆ. நேரு

**இ. மகலனோபிஷ்** ஈ. இந்திரா காந்தி

61. 2013-ல் உணவு பண்டங்கள் நீங்கலானவற்றின் மீதான நுகர்வுச் செலவு நகரங்களை ஒப்பிடும் போது கிராமங்களில்

**அ. அதிகரித்துள்ளது** ஆ. குறைந்துள்ளது

இ. நிலையானதாக உள்ளது ஈ. மிகுதியான ஏற்ற இறக்கங்களைக் கொண்டது

62. இந்திய பொருள் மற்றும் சேவை வரி எந்த நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட உள்ளது?

அ. ஜனவரி 1, 2017 **ஆ. ஏப்ரல் 1, 2017**

இ. ஆகஸ்ட் 3, 2017 ஈ. பிப்ரவரி 1, 2017

63. செப்டம்பர் 2016இல் CBDT யினால் தொடங்கப்பட்டுள்ள வரி செலுத்துவோர்களது குறைகளை தீர்ப்பதற்கான இணையதளமுக மின்னணு வசதி _______ ஆகும்.

அ. ஈ-மார்க்கெட் ஆ. ஈ-NAM

இ. ஈ- விசா **ஈ. ஈ-நிவாரன்**

64. இஸ்லாமிய வளர்ச்சி வங்கியின் முதல் கிளை இந்தியாவில் எங்கு தொடங்கப்பட உள்ளது?

**அ. அகமதாபாத்** ஆ. சென்னை

இ. டில்லி ஈ. மும்பை

65. 14-வது நிதிக்குழுவின் தலைவர்

அ. சி.ரங்கராஜன் ஆ. விஜய் கெல்கர்

**இ. ஒய்.வி. ரெட்டி** ஈ. சுப்பாராவ்

66. கீழ்க்கண்ட எந்த ஒரு காரணி இன்றைய இந்தியாவில் சணல் தொழிற்சாலையின் நலிவிற்கு காரணமாக கருதப்படுகிறது.

1. வெளிநாட்டு வியாபாரத்தில் சரிவு
2. மூலப்பொருள் பற்றாக்குறை
3. செயற்கை இட நிரப்புப் பொருள்களின் கடினப்போட்டி

இவற்றுள் சரியான பதிலை தேர்ந்தெடுக்கவும்.

**அ. 1 மற்றும் 2** ஆ. 2 மற்றும் 3 இ. 1 மற்றும் 3 ஈ. 2 மற்றும் 3

67. இந்தியாவில் தேசிய வருவாயை கணக்கிடும் நிறுவனம்

அ. ரிசர்வ் வங்கி ஆ. திட்டக்குழு

இ. நிதித்துறை **ஈ. மத்திய புள்ளியியல் துறை**

68. பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலம்

அ. 2007-2012 ஆ. 2009-2014 **இ. 2012- 2017** ஈ. 2014-2019

69. நேரு-மகலனோபிஷ் திட்ட மாதிரியை எந்த திட்டத்தில் புகுத்தினர்?

அ. முதல் திட்டம் **ஆ. இரண்டாம் திட்டம்**

இ. மூன்றாம் திட்டம் ஈ. நான்காம் திட்டம்

70. இந்தியாவில் கடந்த சில ஆண்டுகளில் பணவீக்கம் ஏற்பட தூண்டும் முக்கிய காரணி

அ. கிராமங்களில் கூலி அதிகரிப்பு

**ஆ. உணவு தானியங்களின் விலை உயர்வு**

இ. இடைப்பட்ட பொருட்களின் விலை அதிகரிப்பு

ஈ. எரிபொருள்களின் விலை உயர்வு

71. படியடுக்கு வேளாண்மை எங்கு பிரசித்தி பெற்றது

அ. தஞ்சாவூர் & நாமக்கல் **ஆ. ஊட்டி & நீலகிரி**

இ. சேலம் & தர்மபுரி ஈ. மதுரை & திண்டுக்கல்

72. அருவப் பொருள்கள்

அ. இயந்திரங்கள், கருவிகள், தொழிற்சாலைகள் ஆ உபயோகமில்லாத பொருட்கள்

இ. எண்ணெய் வித்துக்கள் **ஈ. உடல்நலம், ஆராய்ச்சி, தரமான கல்வி**

73. இந்திய பொருளாதாரத்தை பொறுத்தவரையில் எந்த ஆண்டு பொருளாதார சீர்திருத்தத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்?

அ. 1952 ஆ. 1981 **இ. 1991** ஈ. 2001

74. இந்தியாவில் வைரம் அறுக்கும் தொழிற்சாலை எங்கே அமைந்துள்ளது?

அ. லக்னோ **ஆ. சூரத்**

இ. லூதியானா ஈ. சண்டிஹார்

75. நிகர நாட்டு உற்பத்தி என்பது

அ. மொத்த உள்நாட்டு உற்பத்தி – தேய்மானம் **ஆ. மொத்த நாட்டு உற்பத்தி – தேய்மானம்**

இ. நிகர நாட்டு உற்பத்தி – தேய்மானம் ஈ. நிகர உள்நாட்டு உற்பத்தி – தேய்மானம்

76. வாழ்வதற்கு வேண்டிய குறைந்தபட்ச வசதிகளுக்குக் கீழே ஒருவர் வாழும் வறுமை நிலையை இவ்வாறு கூறலாம்

**அ. முழுமையான வறுமை** ஆ. ஒப்பீட்டு வறுமை

இ. சுருக்க வறுமை ஈ. உண்மை வறுமை

77. இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்கு காரணமான நிறுவனம்

அ. இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் (CSIR)

**ஆ. இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் (ICAR)**

இ. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO)

ஈ. இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் (ICMR)

78. மக்கள்தொகை இவ்விகிதத்தில் அதிகரிக்கிறது என்று ராபர்ட் மால்தஸ் கூறியது

அ. விகிதாச்சார விகிதத்தில் **ஆ. பெருக்கல் விகிதத்தில்**

இ. கூட்டு விகிதத்தில் ஈ. சிறு விகிதத்தில்

79. 1966-69 ஆண்டுகளுக்கு (ஆண்டு திட்டங்கள்) பின் நடைமுறைப்படுத்தப்பட்ட ஐந்தாண்டு திட்டம் எது?

அ. இரண்டாம் ஐந்தாண்டு திட்டம் ஆ, ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம்

இ. மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் **ஈ. நான்காம் ஐந்தாண்டுத் திட்டம்'**

80. "பாச்பான் பச்சோவ் அந்தோலன்" என்ற அமைப்பு கீழ்க்கண்டவற்றுள் எதற்காக செயல்படுகிறது?

**அ. குழந்தை தொழிலாளி** ஆ, கொத்தடிமை

இ. பால்ய விவாகம் ஈ. வறுமை ஒழிப்பு

81. ________ பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கிறது.

அ. ஏற்றுமதி ஆ. இறக்குமதி

**இ. வாணிபம் (அ) வர்த்தகம்** ஈ. போக்குவரத்து

82. பின்வரும் நாடுகள் சமதர்ம பொருளாதார முறையினைப் பின்பற்றுகின்றன.

**அ. சீனா, கியூபா, வியட்நாம், வடகொரியா**

ஆ. ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, பிரேசில்

இ. ஐரோப்பா, ஜப்பான், ஆஸ்திரேலியா, சீனா

ஈ. ஸ்ரீலங்கா, பாகிஸ்தான், பங்காளாதேஷ், கியூபா

83. இந்திய ரூபாயின் புதிய குறியீடு

அ. £ **ஆ.** ₹ இ. $ ஈ. €

84. கீழ்க்கண்டவற்றில் பொருளியலில் LPG என்று குறிப்பிடுபவற்றுள் இல்லாதது

அ. தனியார் மயமாதல் ஆ. தாராளமயமாதல்

**இ. பொதுமைப்படுத்துதல்** ஈ. உலகமயமாதல்

85. கீழ்வருவனவற்றுள் எது பொதுநிதியின் உள்ளடக்கமாக இல்லை என்பதை குறிக்கவும்

அ. பொதுச் செலவினங்கள் ஆ. நிதி நிர்வாகம்

**இ. காரணி விலை தீர்மானித்தல்** ஈ. கூட்டாட்சி முறை

86. மிதமிஞ்சிய மக்கள்தொகைக்கான காரணம்

அ. பிறப்பு வீதம் மற்றும் இறப்பு வீதம் அதிகரித்தல்

ஆ. பிறப்பு வீதம் மற்றும் இறப்பு வீதம் குறைதல்

**இ. பிறப்பு வீதம் அதிகரித்து இறப்பு வீதம் குறைதல்**

ஈ. பிறப்பு வீதம் குறைந்து, இறப்பு வீதம் அதிகரித்தல்

87. ___________ தொழில் மிகக் குறைந்த முதலீடு கொண்டது.

அ. பெருநிலை ஆ. சிறுநிலை

**இ. குடிமை** ஈ. மத்திய நிலை

88. 'சுகாதாரப் பொதுவுடைமை' என்பது உடல் நலம் மீதான செலவு

அ. ஆயுட்காலத்தைப் பொறுத்திருத்தல்

**ஆ. மக்களின் தேவைக்கேற்ப அளிக்கப்பட வேண்டும்/ மக்கள் செலுத்து நிலைக்கு தகுந்தார் போல் அல்லாமல்**

இ. குழந்தைகளுக்கு மட்டும் அளிக்கப்படுதல்

ஈ. வயதானவர்களுக்கு மட்டும் அளிக்கப்படுதல்

89. பின்வரும் இணையில் ஒருவர் பொருளாதாரத்தின் தந்தை மற்றவர் நவீன பொருளாதாரத்தின் தந்தை எனப்படுவார். சரியான இணையை தேர்ந்தெடு.

அ. ஆடம் ஸ்மித் - டேவிட் ரிக்கார்டோ

ஆ. ஜெ.எம்.கெயின்ஸ் - டி.ஆர். மால்தஸ்

இ. ஆடம் ஸ்மித் - அம்ரித்யா சென்

**ஈ. ஆடம் ஸ்மித் - ஜே.எம். கெயின்ஸ்**

90. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் எந்த வகையான வரவு-செலவுத் திட்டம் அமைந்துள்ளது என்று கண்டுபிடி.

1. உபரி வரவு – செலவு திட்டம் எனப்படும்

2. பற்றாக்குறை வரவு – செலவு திட்டம் என்றும் அழைக்கப்படும்

3. இந்த வரவு – செலவு திட்டமே ஒரு நாட்டின் பொருளாதாரம் சமநிலையை அடைய பயனுள்ளதாக இருக்கும் என்று நவீன பொருளாதார வல்லுனர்கள் கருதுகின்றனர்.

அ. வருவாய் வரவு – செலவுத் திட்டம் ஆ. சமநிலை வரவு – செலவுத் திட்டம்

இ. பூஜ்ஜிய வரவு-செலவுத் திட்டம் **ஈ. பயனற்ற வரவு-செலவுத் திட்டம்**

91. மத்திய அரசால் 2017 ஆம் ஆண்டிற்குள் நடைமுறைக்கு பரிந்துரைக்கப்பட்ட புதிய வரிமுறையின் பெயர் என்ன?

அ. VAT ஆ. MAT **இ. GST** ஈ. ST

92. தேசிய குழந்தை தொழிலாளர் கொள்கை இயற்றப்பட்ட ஆண்டு எது?

அ. 1980 **ஆ. 1987** இ. 1985 ஈ. 1982

93. நாட்டு வருமானத்தை கணக்கிடும் வழி முறைகள்

அ. 2 முறைகள் **ஆ. 3 முறைகள்** இ. 4 முறைகள் ஈ. 5முறைகள்

94. பின்வருவனவற்றுள் எது சரியாக பொருந்தியுள்ளது?

**அ. சொர்ணவாரி - சித்திரை பட்டம்** ஆ. சம்பா - கார்த்திகை பட்டம்

இ. நவரை - ஆடிப்பட்டம் ஈ. சையது - ஆவணி பட்டம்

winmeen.com

95. மீன் பிடித்தல் மற்றும் சுரங்கங்கள் எந்த துறையின் கீழ் வருகிறது?

அ. தனியார் துரை **ஆ. முதன்மைத் துறை**

இ. பணிகள் துறை ஈ. இரண்டாம் துறை

96. எந்த ஆண்டில் பசுமை புரட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது?

**அ. 1967** ஆ. 1977 இ. 1987 ஈ. 1957

97. மக்கள் தொகை வெடிப்புக்கு எது முக்கிய காரணமல்ல என்பதைக் குறிப்பிடுக

அ. அதிக பிறப்பு வீதம் ஆ. சமூக பழக்க வழக்கங்கள்

**இ. அதிக இறப்பு வீதம்** ஈ. ஏழ்மை

98. “இந்து வளர்ச்சி வீதம்” என்று பெயரிட்டவர் யார்?

அ. இலயனல் ராபின்ஸ் **ஆ. இராஜ் கிருஷ்ணா**

இ. மகாலநோபிஸ் ஈ. பார்பரா ஊட்டன்

99. சமுதாய மாற்றம் காணும் முகவர் யார்?

அ. உழவர் **ஆ. தொழில் முனைவோர்**

இ. நெசவாளர் ஈ. நடிகர்

100. நிதி ஆயோக்-குழுவின் முக்கிய பணிகளில் பின்வரும் எந்த பணி இடம் பெறாது?

அ. திட்டங்கள் மற்றும் முயற்சிகளை கண்காணிக்கவும், மதிப்பீடு செய்யவும்

ஆ. நம்பகரமான கிராம அளவில் திட்டங்களை வகுப்பது மற்றும் வழிமுறைகள் அபிவிருத்தி செய்தல்

**இ. மத்திய அமைச்சகங்கள் மற்றும் மாநில அரசுகளுக்கு நிதி வழங்கல்**

ஈ. கூட்டுறவு கூட்டாட்சி மற்றும் வடிவமைப்பு மூலோபாய கொள்கை வளர வழி வகுக்கும்